www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முழு ஆண்டுப் பொதுத் தேர்வு - 2022

## ஒன்பதாம் வகுப்பு

பதிவ எண்:

நேரம்: 2.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **15×1=15**

1. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு ............
அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருது கட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்

4. தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

5. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
- இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?
அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

6. கல்வி இல்லாத பெண்கள் எந்த நிலத்திற்குச் சமமானவர்கள்?
அ) செம்மண் ஆ) களனி இ) களர்நிலம் ஈ) பாலைநிலம்

7. மரவேர் என்பது ............. புணர்ச்சி.
அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

8. கருக்கொண்ட பச்சைப் பாம்பு போல எது தோற்றம் கொண்டுள்ளன?
அ) பாக்குமரம் ஆ) தென்னை மரம் இ) வாழை மரம் ஈ) நெற்பயிர்கள்

9. இந்திய தேசிய இராணுவத்தை ........... இன் தலைமையில் ............. உருவாக்கினர்.
அ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ் இந்தியர்
இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - இக்குறட்பாவில் பயின்றுள்ள அணி எது?
அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி
இ) சொற்பொருள் பின்வருநிலையணி ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

11. அசை ........... வகைப்படும்.
அ) நான்கு ஆ) மூன்று இ) இரண்டு ஈ) ஐந்து

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

தித்திக்கும் தெள் அமுதாய்த் தெள் அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்
குறம் என்றும் பள்ளு என்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவு என்று மூன்று இனத்தும் உண்டோ

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

அ) இராவண காவியம் ஆ) மணிமேகலை இ) தமிழ்விடுதூது ஈ) பெரியபுராணம்

13. இப்பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்கள்
    அ) தித்திக்கும், முத்தி ஆ) குறம், உறம்
    இ) முத்திக்கனியே, முத்தமிழே ஈ) பள்ளு, கொள்வார்
14. இப்பாடலில் காணப்படும் சிற்றிலக்கியங்கள்
    அ) அம்மானை, ஊசல் ஆ) கோவை, பிள்ளைத்தமிழ்
    இ) குறம், பள்ளு ஈ) உலா, ஆற்றுப்படை
15. இப்பாடலில் அமைந்துள்ள "முத்தமிழ்" என்னும் தொகைச் சொற்களை விரித்தெழுதுக?

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி (21- வது வினாவிற்கு கட்டாயமாக விடையளி)** **4×2=8**

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க :
    அ) "வைக்கம் வீரர் என்று சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார்.
    ஆ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வுநடத்தினர்.
17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
18. நிலம் போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
19. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
20. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
21. "தலை" என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு -2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளி:** **5 × 2 =10**

22. நீ இதைச் சொல் எனக் கூறினேன் அல்லவா? *(கட்டளைத் தொடராக மாற்று)*
23. *கொடுக்கப்பட்ட இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க :*
    அரை - அறை
24. *பிழையை நீக்கி எழுதுக:*
    அ) பவளவிழிதான் பரிசு உரியவள்.
    ஆ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.
25. யாப்பின் உறுப்புகள் யாவை?
26. *கலைச்சொற்கள் தருக :*
    அ) Launch vehicle ஆ) Volunteer
27. *பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக:*
    என் ஆசிரியர் நீ நன்றாகப் படிக்கிறாய் எம் ஐ டியில் வானூர்திப் பொறியியல் என்னும் துறையை எடுத்துப்படி என்று அறிவுரை கூறினார்
28. கொள்வார் - *பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி :** **2×3=6**

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
30. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



31. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:*

கலித்தொகை தவிர, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது. ஏறு தழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன. எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

அ) மாடு தழுவுதல் நிகழ்வை எது பதிவு செய்துள்ளது?

ஆ) எந்தெந்த இலக்கியங்களில் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது?

இ) மாடு தழுவுதலுக்கு மற்றொரு பெயர் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி : (34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 2×3=6

32. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

33. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திர விழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34. அடிபிறழாமல் எழுதுக:

"சொல் அரும்" - என்று தொடங்கும் சீவக சிந்தாமணிப் பாடல். **(அல்லது)**

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே" எனத் தொடங்கும் உயிர் வகைப் பாடலை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி :** 2×3=6

35. உன் பெற்றோர் மகிழுமாறு நீ செய்ய வேண்டிய செயல்கள் மூன்று எழுதுக.

36. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

*- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.*

37. வஞ்சப்புகழ்ச்சியணி என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

# பகுதி - IV

## பிரிவு -1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி :** 5×5=25

38. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்து கருத்துகளைக் கடிதமாக எழுதுக. **(அல்லது)**

சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக்கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

39. *பா நயம் பாராட்டுக :*

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப்பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே!

- வாணிதாசன். **(அல்லது)**


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



சாலையில் செல்லும் முன் நீ கருத்தில் கொள்ள வேண்டிய ஐந்து சாலைப்பாதுகாப்பு கருத்துகளை எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக :



41. **மொழி பெயர்க்க :**

Akbar said, "How many crows are there in this city without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my Lord".

"How can you be so sure?" asked Akbar Birbal said, "Make your men count, my Lord, If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives else where" Akbar was pleased very much by Birbal's wit.

42. விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க :

| புத்தகம் படிப்போம் ! | புதியன அறிவோம்! |
|---|---|
| **புத்தகத் திருவிழா** | |
| நாள் - செப்டம்பர் 19 முதல் 28 வரை | |
| இடம் - சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் | |
| நேரம் - காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை | |
| (முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்) | |
| (நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம் பெறும்) | |
| அனைவரும் வாரீர்! | அறிவுத்திறம் பெறுவீர். |

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி :** 3×8=24

43. பெரிய புராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

44. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க. (அல்லது)
இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

45. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக. (அல்லது)
பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

-------

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com